நுவரெலியா மாநகர சபை - 2022

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுவரெலியா மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அட்டுறு அடிப்படையில் வருமானங்கள் செலவினங்களை முன்வைப்பதாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட இருந்தபோதும் அனைத்து வருமானங்கள் மற்றும் செலவினங்கள் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | பட்டியலில் இருந்து பெற்றுக்கொண்ட வருமானங்கள் மாத்திரம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய வருமான செலவினங்களில் வேறுபாடு விட்டுவிடுதல் தவறுகளாக கருதப்பட்டு நாட்குறிப்பு பதிவுகள் மூலம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அட்டுறு அடிப்படையில் கணக்குகள் வைக்கப்படவேண்டும் |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டுக்குரிய ரூபா 387,887 ஆன முதலீட்டு வட்டி மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் அடுத்த ஆண்டில் நடவடிக்கை எடுப்பதாக | நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்கள் காண்பிக்கப்பட வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டில் ரூபா 460,675 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 ஆம் ஆண்டுக்குரிய மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட 444,000 ஆன கணக்காய்வு கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாயவாண்டிற்குரிய மற்றும் முன்னைய ஆண்டுக்குரிய கணக்காய்வு கட்டணங்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | முன்னைய ஆண்டில் தீர்வு செய்யப்பட்ட ரூபா 7,463,319 கூட்டுத்தொகையான நிர்மாண கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்ந்தும் செலவின கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய 2023 ஆம் ஆண்டில் 25 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 3,559,315 தொகை மீளாய்வாண்டின் போது செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும் |
| (உ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த 3 வாகனங்களில் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவது ஆக | சொத்துக்களை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும் |
| (ஊ) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட தீர்வு செய்யப்படாத மற்றும் ரூபா 705,360 ஆன பெற வேண்டிய வியாபார அனுமதிப்பத்திர வழக்கு கட்டணங்கள், கணக்குகளில் இருந்து விடுபட்டு இருந்தது | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்குவது ஆக | நிதிக் கூற்றுக்களைச் சரியாக தயாரிக்க வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பராமரித்து செல்லப்படும் என்று கடைகசுலி புத்தக மீதி மற்றும் கணனி மென்பொருள் முறைமையின் மீதிகளுக்கு இடையே வேறுபாட்டை சீராக்க 34 மற்றும் 35 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவின் ஊடாக முறையே ரூபா 3,493,572 மற்றும் ரூபா 2,527,557 தொகையை திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டு இருந்தபோதும் இச்சீராக்கம் தொடர்பாக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ள பட்டிருக்கவில்லை | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் விடயங்களை முன்வைப்பதாக | கணக்கு மீதிகளை சீராக்குவதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31ல் உள்ளவாறு ரூபா 2,085,827 ஆன 3 கணக்கு மீதிகளின் அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கபடாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை | பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் விடயங்களை முன்வைப்பதாக | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (நியம உப விதி உறுப்புரை) சட்டம் | | | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (i) | II ஆம் பகுதியின் வியாபார விளம்பர அறிவித்தல் உறுப்புரையின் a 01 ஆம் பந்தி | முன்னைய ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டின் ஜூன் 30 ஆம் திகதி வரை 198 விளம்பர பதவிகளுக்காக ரூபா 9,996,467 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்த போதும் அதற்காக அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டிருக்க வில்லை | குறைபாடுகளை சீர்செய்து எதிர்காலத்தில் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | II ஆம் தொகுதியின் XVII மோட்டார் வாகன நிறுத்தி வைத்தல் உப உறுப்புரையின் 08 ஆம் பந்தி | 2022 ஆகஸ்ட் 18 பரீட்சிக்கப்பட்ட திகதியில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்ட அனுமதி பத்திரம் ஒன்று இல்லாமல் நான்கு வாகன நிறுத்துமிடடங்களில் 67 வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன | வாகன நிறுத்து மிடங்களில் வைக்கப்படும் வாகனங்களுக்கு குறித்த வாகனக் கட்டணங்களை அறவிடுமாறு ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | வாகனங்களிலிருந்து கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவு | சபைக்குரிய பட்டியலிடப்பட்ட வீடு ஒன்றில் குடியிருக்கும் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 2016 ஜூலை முதல் 2017 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் ரூபா 62,509 வீட்டு வாடகை அறவிடபட்டிருக்க வில்லை | இது தொடர்பாக முன்னாள் நகர ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக | நிலுவை வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 மற்றும் 4.5 ஆம் பிரிவுகள் | மரணித்த மற்றும் ஓய்வு பெற்ற 26 உத்தியோகத்தர்கள் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 11 உத்தியோகத்தர்கள், சேவையை விட்டு சென்ற 17 உத்தியோகத்தர்கள் மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 21 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 3,523,866 ஆன கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கடன் மீதிகளை அறவிடுவதற்காக தேவையான தகவல்கள் ஓய்வூதிய திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ள தாக | நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி 137(5) | பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டின் போது அரசு கம்பெனி ஒன்றுக்கு செலுத்தப்பட்ட தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 275,805 ஆன பொருட்கள் கிடைத்திருக்கவில்லை | பொருட்களை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக | கொடுப்பனவு களுக்குரிய உரிய பொருட்களை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) நி.பி 396(ஈ) | வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாது காலம் கடந்த ரூபா 2,394,582 ஆன 30 காசோலைகள் தீர்வு | தீர்வுசெய்யப்படாத குறித்த காசோலைகளை வருமானத்துக்கு எடுப்பதற்காக எதிர்வரும் | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | |
| (iii) | நி.பி 571 | காலாவதியான வைப்புக்களை விடுவிப்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் மீதியை அரச வருமானத்துக்கு எடுக்ககூடாத தீர்வையாகாத காசோலைகள், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வைப்புகள், வழக்குத் தீர்ப்புக்கள் மீதான வைப்புக்கள் என்பவற்றின் மொத்தம் ரூபா 3,265,096 ஆன மீதிகள் வருமானத்துக்கு எடுக்கப்பட்டிருந்தன. | மீண்டும் பரீட்சித்து பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் | | | |
| | 371(2) (ஆ) பந்தி | 10 சந்தர்ப்பங்களின் போது 01 மாதம் முதல் 08 மாத காலத்திற்குள் இருந்து தீர்வு செய்யப்படாத முற்பணம் ரூபா 1,960,650 ஆக இருந்தது. | இது தொடர்பாக ஆரம்ப பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படுவதாக | முற்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) | மீளாய்வாண்டின் செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக | செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 219,928,379 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 130,904,874 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு நடைமுறை கணக்கு களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வங்கிக் இணக்க அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்த இனங்காணப்படாத நேரடி வைப்புக்கள் மற்றும் வங்கி கட்டணங்களின் மொத்தம் ரூபா 5,509,725 இனங்காணப்பட்டு தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை | காசேட்டில் சீராக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | குறித்த மீதிகள் இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 08 ஆண்டு காலப்பகுதிகளில் 14 சந்தர்ப்பங்களில் வருமானமாக கிடைத்து மதிப்பிழந்த ரூபா 1,100,834 ஆன காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | இம் மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர பிதாவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 139,912,400 | 129,038,341 | 138,880,404 | 124,723,544 | 147,257,700 | 113,114,777 | 123,149,826 | 134,565,609 |
| (ii) | வாடகை | 78,955,000 | 58,864,187 | 56,869,600 | 73,329,599 | 81,466,154 | 63,380,926 | 71,671,502 | 71,335,012 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 19,807,000 | 23,595,274 | 17,610,877 | 27,280,075 | 21,554,750 | 20,144,177 | 16,141,310 | 21,295,678 |
| (iv) | ஏனைய வருமானம் | 465,849,100 | 54,395,698 | 45,294,666 | 47,561,373 | 465.866,558 | 33,042,066 | 318,456,705 | 38,460,341 |
| | | 704,523,500 | 265,893,500 | 258,655,547 | 272,894,591 | 716,145,162 | 229,681,946 | 529,419,343 | 265,656,640 |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| i | மீளாய்வாண்டின் இறுதி திகதியில உள்ளவாறு நிலுவை வீதவரி கணக்கின் மீதி ரூபா 78,266,493 ஆக இருந்ததுடன் அதில் தனியார் ஆதனங்களில் இருந்து அறவிப்பட வேண்டிய வீத வரி நிலுவை ரூபா 63,220,565 ஆக இருந்தது. அதில் ரூபா 56,744,559 ஆன 3875 வீதவரி வளவுகளிலிருந்து 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டி இருந்தது. | அனைத்து பிரதேசங்களையும் மேவுகை செய்யும் வகையில் வீதி வரியை அறவிடுவதற்கு நிகழ்ச்சிகள் செயற் படுத்தப்படுவதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| ii | மீளாய்வாண்டின் இறுதிப் திகதியில் உள்ளவாறு 171 காணி உரிமையாளர்களிடம் இருந்து ரூபா 17,523,980 ஆன மீதி ஒன்று அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன் 01 ஆண்டு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 16,633,980 ஆக இருந்தது. மேலும் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதிகளில் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நிலுவைத் தொகை மீதிகளுடன் கூடிய 9 காணி உரிமையாளர்களிடமிருந்து ரூபா 2,932,032 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்காக காணி உரிமையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |
| **(ஆ)** | **வாடகை** | | |
| i. | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் 442 கடைகளில் இருந்து ரூபா 38,813,255 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன் அதில் 212 கடைகளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட மீதி ரூபா 35,365,655 ஆக இருந்தது. | இவ்வாண்டில் நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |
| ii | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிரெகரி கடை வாடகை ரூபா 2,678,288 ஆன நிலுவையொான்று காணப்பட்டதுடன் அதில் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 2,183,228 ஆக இருந்தது. | கொவிட் 19 தொற்று காலப்பகுதியில் வருமானத்தை உழைப்பதற்கு முடியாமல் இருந்ததாகவும் பட்டியலிடலை பதிவழிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |
| iii | வருடாந்த குத்தகைக்கு வழங்கிய ஆதனங்களிலிருந்து மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு | எதிர்காலத்தில் அறவிடப்படுவதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறவேண்டிய குத்தகை வாடகை ரூபா 11,358,981 ஆக இருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 3,010,396 ஆக காணப்பட்டது. 03 ஆதனங்களிலிருந்து ரூபா 7,954,499 தொகை 01 இற்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் காணப்பட்டது. | | |
| iv | விக்டோரியா பூங்காவின் புதிய சிற்றுண்டிச்சாலை 2011 மார்ச் 15 ஆந் திகதி முதல் 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டின் மார்ச் 14 ஆம் திகதி உடன்படிக்கை காலம் முடிவடைந்து இருந்த போதும் உடன்படிக்கையின் காலத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அத்திகதியில் உள்ளவாறு ரூபா 2,241,319 கூட்டுத்தொகையான குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை கட்டணங்களை கொடுப்பனவு செய்யாமை தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| i | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் கணக்கில் நிலுவை மீதி ரூபா 23,682,206 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 23,678,766 தொகை 01 ஆண்டு முதல் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 473 குதத்கையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | நிலுவைத் தொகையை அடைவதற்காக எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| ii | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 171 காணி உரிமையாளர்களிடம் இருந்து வருடாந்த அனுமதிப்பத்திரம் கட்டணங்கள் ரூபா 17,523,980 ஆன தொகை அதைவிட பல வேண்டியதாக காணப்பட்டதுடன் அதில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட நிலுவை மீதியை ரூபா 16,633,980 ஆக இருந்த போதும் நிலுவை கட்டணங்கள் அறியப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறிவதற்காக காணி உரிமையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| iii. | மாநகர சபையின் கட்டளைச் சட்டம் 247 (அ) பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது வருடாந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2500 இனை மிகைக்கும் போது வியாபார அனுமதிக் கட்டணம் ரூபா 5,000 அறவிடப்பட வேண்டிய போதிலும் வருடாந்த பெறுமதி 2500 இற்கு மேற்பட்ட 139 வியாபார | 2023 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலையங்களிலிருந்து ரூபா 5,000 இற்கு குறைந்து வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. இதன் காரணமாக சபை நிலையத்திற்கு ரூப 353,000 ஆன நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது | | |
| **(ஈ)** | **ஏனைய வருமானம்**<br>---------------------------------- | | |
| i | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய படகு வருமான கணக்கில் மீதி ரூபா 18,632,011 ஆக இருந்ததுடன் அம்மீதியில் நிலுவையை ரூபா 500,000 இற்கு மேற்பட்ட 09 படகு உரிமையாளர்களிடம் இருந்து ரூபா 15,087,072 ஆன மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை படகு வாடகையை அறிவிடுவதற்காக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 28,833,071 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 14,811,076 தொகை 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் 1541 நீர் பாவனையாளர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை | நீர் கட்டணங்களை செலுத்தாதுள்ள நீர் இணைப்புகளை துண்டித்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (உ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்<br>------------------------------------------------ | | |
| | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 426,379 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 47,127,786 ஆக இருந்தது. . | அறவிடப்பட வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டணங்களை அனுப்புமாறு மத்திய மாகாண பிரதான செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | சுகாதார பிரிவிற்காக கடந்த 5 ஆண்டுகளில் 11 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 111,450,200 நிதி | பற்றாக்குறை மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக அனைத்து அபிவிருத்தி | மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படவேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடு செலவினம் ஒன்றுக்கும் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்ததுடன், மலசல கூடங்களை நிர்மாணித்தல், மரணச் சடங்கு கூடமொன்றை அமைத்தல், வாகனங்களைக் கொள்வனவு செய்தல் மலப் போக்குவரத்து முறைமையை திருத்தம் செய்தல் போன்ற போன்ற செயற்திட்டங்களை செயற்படுத்தி இருக்கவில்லை. | திட்டங்களும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக | |
| (ஆ) | மீளாய்வாண்டில் கழிவுப் முகாமைத்துவத்தின் கீழ் 107 வடிகால் மற்றும் வாய்க் கால்களைப் பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்காக ரூபா 15,000,000 ஆன நிதி ஏற்பாடு பாதீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அதில் 93 நிறைவேற்றப்படாமல் ரூபா 12,110,812 ஆன நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிலிருந்து புதிய கழிவுப்பொருள் முகாமைத்துவ திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | வடிகால் மற்றும் வாய்க்கால்கள் சுத்திகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பௌதீக திட்டம், ஒழுங்கைகள் காணிகள் மற்றும் கட்டிடங்கள் நிகழ்ச்சிச்சிகளுக்காக 2018 முதல் 2022 காலப்பகுதிக்குரிய நான்காண்டு திட்டத்தில் 158 முன்மொழிவுகளை செயற்படுத்து வதற்கு திட்டமிடப்பட்டு இருந்த போதும் 04 ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களில 52 மாத்திரமே நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட 106 செயற்திட்டங்களில் செயல்படுத்தப் படாமல் இருந்ததுடன் திட்டமிடப்படாத 48 செயற் திட்டங்களுக்காக ரூபா 40,885,340 தொகை செலவிடப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தன | இயற்கை விபத்துக்கள் வெள்ளம் போன்ற அனர்த்த நிலைமை ஏற்படும் போது அவ்வாறு வழங்கப்பட்ட செயற் திட்டங்களை செயல்படுத்தாமல் அனர்த்த நிலைமையை தவிர்ப்பதற்கான செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் சபையின் நிதி நிலைமை அடிப்படையில் சில பாரிய திட்டங்களை செயல்படுத்த முடியாமல் இருந்ததாக | அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். |
| (ஈ) | ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்பட்ட உடைந்த பழைய குழாய் முறைமைகளுக்காக புதிய குழாய் முறைமைகளை நிர்மாணித்தல் குளோரின் இடல் முறைமையை மேம்படுத்துதல், பராமரிப்பு கட்டுப்பாடு, நீர் பரிசோதனை கூடம் ஒன்றை நிர்மாணித்து நீர் உருவாக்க செயற்திட்டம், நீர் | மீண்டெழும் வரவு மற்றும் செலவின தலைப்பின் கீழ் அந்தந்த செலவினங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக | திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ளல், பூஸ்டர் பம்பியறை ஒன்றை நிர்மாணித்தல் அதிகரித்தல் போன்ற 09 செயற்பாடுகள் செயற்படுத்தப் பட்டு இருக்கவில்லை | | |
| (’உ) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 12,087,162 செலவிட்டு ஏற்படுத்தப்பட்ட சூரிய மின் விளக்கு செயற்திட்டம் தொடர்பாக 2022 திசெம்பர் 23-ஆம் தேதி மின்சார பிரிவு உத்தியோகத்தர்களுடன் மேற்கொண்ட தெரிவு பரிசோதனையின் போது பரீட்சிக்கப்பட்ட 35 வீதி விளக்குகள் தூண்களுக்கு இடையே 18 வீதி விளக்கு தூண்களில் 11 பட்டறி மற்றும் சூரிய பெனல்கள் காணாமல் போயிருந்தன. மூன்று ஆண்டுகள் உத்தரவாதத்துடன் ஆன பட்டறி நகரசபை ஊழியர்களால கழற்றப்பட்டு உடன்படிக்கை செய்யப்பட்ட கம்பெனியின் உடன்படிக்கை காலத்தில் மாற்று வழி ஒன்று இல்லாத காரணத்தினால் செயற்திட்டம் வெற்றி அளிக்காமல் காணப்பட்டது. | இந்த பட்டறி காணாமல் போனமை தொடர்பாக நுவரெலியா போலீஸ் நிலையத்தில் மூலம் புலனாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக | பொறுப்பு வாய்ந்தவர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1991 முதல் 2018 வரையான காலப்பகுதியில் நன்கொடையாக கிடைத்த 11 மோட்டர் வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வாகனங்களையும் மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதி பிரதான பதிப்பாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வியாபார அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது சுகாதார பரிந்துரைகளுக்கு சுகாதார பிரிவிற்கு 2022 ஜனவரி 04 ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் 08 ஆம் திகதி வரை கையளிக்கப்பட்ட 496 விண்ணப்பங்களில் 388 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு மீள | எதிர்காலத்தில் தாமதமின்றி வியாபார அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தாமதமின்றி பரிந்துரைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையளிக்கப்படாமல் இருந்ததுடன் 108 விண்ணப்படிவங்கள் 02 மாதங்கள் முதல் 09 மாதங்கள் காலம் வரையான தாமதத்துடன் கையளிக்கப்பட்டிருந்தன. | | |
| (இ) | ஹாவாஎலிய மற்றும் உடுப்புசல்லாவ வீதி மீள்சுழற்சி நிலையத்திலிருந்து 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான வேண்டிய கேள்வி கட்டணங்களின் மொத்தம் ரூபா 801,218 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய வாடகைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |
| (ஈ) | உடுப்புசல்லாவ பிரதான அலுவலகத்திற்கு அண்மித்ததாக 16 கடைகளை பிரதேச ரீதியாக விலை கோரி நகர சபை எல்லைக்குள் நிரந்தர குடியிருப்பாளர்களுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு 2014 ஏப்ரல் 07 ஆம் திகதி பொதுச்சபை தீர்மானித்திருந்த போதும் 02 கடைகள் மா நகர சபையின் எல்லைக்கு வெளியே உள்ள நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. மூன்று கடை உரிமையாளர்கள் மாநகர சபை எல்லைக்கு அப்பால் நபர்களுக்கு அவர்களின் அற்றோனித் தத்துவ அதிகாரத்துடன் கையளித்திருந்தனர் 12 குத்தகை யாளர்களால் உடன்படிக்கை செய்யப்பட்ட வியாபாரத்துக்கு புறம்பான துறைசார் மற்றும் வியாபாரங்களை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் 10 கடைகள் ரூபா 30,000 முதல் ரூபா 60,000 வரை உப குத்தகைக்கு வழங்கப்பட்டு இருந்தது. ஒரு கடை அறைக்காக குத்தகையாளர் வெளியிட்டு உறுதி ஒன்றையும் தயாரித்துக் கொண்டிருந்தார். | இது தொடர்பான பரிட்சித்து படித்து நடவடிக்கை எடுப்பதாக | உப குத்தகையாளர்களை அகற்றி சட்டரீதியாக கடைகளை கையளிக்கப்பட வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டில் ரூபா 1,153,701 ஆன வழக்கு கட்டணங்கள் செலுத்தப்பட்டு இருந்ததுடன் சபைக்கு எதிராக மற்றும் சபையினால் வெளி தரப்பினருக்கு புதிதாக தொடரப்பட்ட வழக்கு தொடர்பான தகவல்கள் கணக்காய்வு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | வழக்கு தொடர்பான தகவல்களை பதிவேடுகளுக்கு உட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆகஸ்ட் 23 ஆம் திகதி வெளிக்கள பரிசோதனையின்போது 100 மீட்டர் நீளமான மற்றும் 1.8 மீட்டர் முதல் 2.4 மீட்டர் வரை உயரமான கோலப் விளையாட்டு அரங்கை சுற்றி அத்துமீறி சுவரொன்றும் கேபியன் சுவரொன்றும் திட்ட குழுவின்ற அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்தது | நீண்ட வார இறுதியில் அவர்களால் அந்த இடத்தில் சுவர் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1980 ஆம் ஆண்டு முதல் சபைக்கு கிடைத்திருந்த 03 வாகனங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை | உரித்தினை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுப்பதாக | உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 5,578,000 ஆன 7 மோட்டார் வண்டிகள் உடைந்த நிலையில் காணப்பட்ட மோட்டார் வண்டிகள் உடைந்த நிலைமையில் காணப்படும் மோட்டார் வண்டிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 02 மோட்டார் வாகனங்கள் விளைவற்று மற்றும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன. | தற்போது உடைந்த நிலையில் காணப்படுவதால் அரசின் மதிப்பீட்டை பெற்றுக்கொண்டு ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கைதவிர்ப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 32 பதவிகளில் 122 வெற்றிடங்களும் 03 பதவிகளில் 45 மிகைகளும் காணப்பட்டன. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடமும் அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக | வெற்றிடங்களை பூர்த்தி செய்ய வேண்டும். |

## 4 கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் | பொருளாதார சிக்கலின் அடிப்படையில் நாட்டில் காணப்பட்ட சீரற்ற | தேவைப்பாடு இனங்காணப்பட்டு கவனத்துடன் பாதீடு |

| | | |
|---|---|---|
| உள்ளவாளான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 05 வருமான விடயங்களில் 02 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையிலும் 06 செலவின விடயங்களில் 9 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையும் விலகல்கள் அவதானிக்கப்பட்டதாலும் ரூபா 52,516,800 ஆன 40 மூலதனச் செயற்திட்டங்களில் செலவினம் பூச்சமாக இருந்ததாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | நிலை காரணமாகவும் குறித்த திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்ற முடியாது இருந்ததாக | தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.2 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவ திட்டமொன்று தயாரிக்கப்படா திருந்ததுடன் ஓராண்டுக்கு 5931 தொன் அளவிலான உக்கும் கழிவுகள் சேகரிக்கப்பட்டு சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்படாமல் சந்ததன்ன கழிவுத்தொகுதிக்கு வெளியேற்றி மண் இட்டு மூடும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் இருந்து புதிய கழிவு முகாமைத்துவ திட்டம் ஒன்றை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டமொன்று செயல்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | தலகள ஓயாவின் கழிவுகள் நேரடியாக கிரகரி குளத்திற்கு வெளியேற்றப்படுவது அவதானிக்கப்பட்டது இந்த கழிவுடன் கூடிய கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றுவதால் கிரகெரி குளம் மாசடைந்து அதில் காணப்படும் நீர் வாழ் உயிரினங்கள் மற்றும் நீர் வாழ் அங்கிகளுக்கு அச்சுறுத்தலாக இருந்தது. | தலகள ஓயாவில் இருந்து வெளியேற்றப்படும் நீரை சுத்திகரிக்கும் செயற் திட்டத்திற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | கழிவுநீரை சுத்திகரிக்க படவேண்டும் |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்காக இலக்குகள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |